**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர். மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்: pro@tnau.ac.in

---

பெறுநர்,
ஆசிரியர்,

தேதி: 27.02.2023

ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் Ecofest'23 சர்வதேச மாநாடு**

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம், வேளாண் பொறியியல் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிறுவனம், எரிசக்தி மற்றும் சுற்றுச்சூழல் பொறியியல் துறையின் "Ecofest'23: ஆற்றல் மாற்றம் மற்றும் காலநிலை நடுநிலைமை" பற்றிய சர்வதேச மாநாடு இன்று (27.02.203) பல்கலைக்கழக அண்ணா அரங்கில் நடைபெற்றது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் முனைவர் வெ.கீதாலட்சுமி அவர்கள், இம்மாநாட்டை தொடங்கி வைத்து, ஆற்றல் மாற்றம் மற்றும் காலநிலை நடுநிலைமையின் முக்கியத்துவம் குறித்து தனது கருத்துக்களை தெரிவித்தார். வேளாண் பொறியியல் கல்லூரியின் முதன்மையர் முனைவர். அ. ரவிராஜ் அவர்கள் வாழ்த்துரை வழங்கினார்.

கோவை மாநகராட்சி ஆணையர் திரு. M. பிரதாப், இ.ஆ.ப., அவர்கள் தனது சிறப்புரையில் புவி வெப்பமயமாதலால் வேளாண்மையில் ஏற்படும் மாற்றங்கள் மூலம் அதன் உற்பத்தியில் உண்டாகும் பாதிப்புகள் குறித்து விளக்கினார். மேலும் பல்வேறு துறைகளைச் சேர்ந்த விருந்தினர்கள் இம்மாநாட்டில் பங்கேற்றனர். இச்சர்வதேச மாநாட்டின் மலர்களை சிறப்பு விருந்தினர்களும் பல்கலைக்கழக துணைவேந்தரும் இணைந்து வெளியிட்டனர்.

மாணவர்கள் மாநாட்டு வளாகத்தை கழிவுகளிலிருந்து கலைநயத்துடன் புதுமையாக அலங்கரித்தனர் மற்றும் மாநாட்டிற்கு பயன்படுத்தப்பட்ட பொருட்கள் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக இருந்தன. முன்னதாக, மாணவர் அமைப்புச் செயலர் திருமதி ஏஞ்சலா ஜெய்சன் வரவேற்றுப் பேசினார், முடிவில் மாணவர் அமைப்புச் செயலாளர் திரு. D. யோகேஷ்வர் நன்றியுரை ஆற்றினார்.

**மக்கள் தொடர்பு அலுவலர்**